**நாள்: 02.06.2026**
**O.S. No. 27/2022**

**வா.சா.1**
**பெயர்: அமிர்தலிங்கம்,  த/பெ. நைனான்**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

என் தகப்பனாருக்கு தமிழக அரசால் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு சொத்து வழங்கப்பட்டது என்ற விபரமும் இந்த பிரதிவாதிகளால் மேற்படி சொத்தில் எவ்வளவு விஸ்தீரணம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்ற விபரமும் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வழக்குரையில் 840 ச.அடியை மட்டும் பிரதிவாதிகள் ஆக்கிரமித்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். தாவா புலஎண்ணின் பூரா விஸ்தீரணம் எவ்வளவு என்பது குறித்தும் அதில் எவ்வளவு விஸ்தீரணம் இந்த பிரதிவாதிகளால் ஆக்கிரமனம் செய்யப்பட்டுள்ளது என்பது குறித்தும் நான் வழக்குரையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல.

இந்நீதிமன்றம் மூலம் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு தாவா சொத்தினை என்னுடைய செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையிலும், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின் தொடர்ச்சியாக ஏற்பட்ட பட்டாவின் அடிப்படையிலும் தான் அளவீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். மூல ஆவணங்கள் அடிப்படையில் தாவா சொத்து அளவீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். அரசால் என் தகப்பனாருக்கு வழங்கபட்ட பட்டா ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.

//இன்றைய குறுக்கு விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2026.06.02 13:03:41 +0530